Sl. No. of Q.P: 194

F

Unique Paper Code: 208162
Name of the Paper: Functional Grammar & Skills of Language
Name of the Course: B.A (Prog.) Tamil-B
Semester: I Semester

Time. 3 Hours. Max. Marks. 75

I. எவையேனும் இரு வினாக்களுக்கு விடை தருக: 7.5 x 2=15

1. எழுத்து என்றால் என்ன? விவரிக்க.

2. சார்பெழுத்துகளைச் சான்று தந்து விளக்குக.

3. மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகளைச் சான்றுகளுடன் விவரிக்க.

4. ஔகாரக் குறுக்கம், ஆய்தக் குறுக்கம் குறித்து எழுதுக.

5. குற்றியலுகரம், குற்றியலிகரம் ஆகியவற்றை விவரிக்க.

II. எவையேனும் இரு வினாக்களுக்கு விடை தருக: 5 x 2=10

1. இலக்கிய வகைச் சொற்களைச் சான்றுகளுடன் விளக்குக.

2. பெயர்ச்சொல் என்றால் என்ன? சான்றுகளுடன் விளக்குக

3. இயற்சொல் என்றால் என்ன? எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக

4. திசைச்சொல் என்றால் என்ன? சான்று தந்து விவரிக்க

III. எவையேனும் இரு வினாக்களுக்கு விடை தருக: 5 x 2=10

1. வாக்கியம் என்றால் என்ன? விளக்குக

2. வல்லினம் மிகும் இடங்களைச் சான்றுதந்து விளக்குக

3. உடம்படுமெய் என்றால் என்ன? விளக்குக.

4. கலவை வாக்கியம் என்றால் என்ன? சான்றுகளுடன் விவரிக்க.

IV. கடித வகைகளை விவரிக்க. 10

(அல்லது)

ஒரு தனியார் விமானக் கம்பெனியின் மேலாளர் பதவிக்கு விண்ணப்பம் ஒன்று எழுதுக.

P.T.O

V. உரையாடல் உத்தி குறித்து விவரிக்க. 10

(அல்லது)

தங்கள் கல்லூரி அலுவலக ஊழியரிடம் உதவி கேட்கும் விதத்திலான ஓர் உரையாடலை எழுதுக.

VI. ஒரு சொல் குறித்த பல சொற்கள் என்றால் என்ன? எடுத்துக்காட்டுகள் தந்து விவரிக்க. 10

(அல்லது)

பல்பொருள் குறித்த ஒருசொல் என்றால் என்ன? சான்று தந்து விளக்குக.

VII. கீழ் வரும் பகுதியைப் படித்து கேட்கப்பட்டிருக்கும் வினாக்களுக்கு உரிய விடை தருக. 10

நாடக இலக்கண நூல்கள் தமிழில் முழுமையாக இன்றுவரை எதுவும் கிடைக்கவில்லை. சில நாடக இலக்கண நூல்களிலுள்ள சூத்திரங்களைச் சில உரையாசிரியர்கள் தங்கள் உரையில் மேற்கோளாகச் சுட்டுகின்றனர். நாடக இலக்கண நூல்கள் பல தமிழில் இருந்துள்ளன. முறுவல், சயந்தம், குணநூல், செயிற்றியம் என்னும் நாடக இலக்கண நூல்களை அடியார்க்கு நல்லார் தம் சிலப்பதிகார உரையில் குறிப்பிடுகிறார். செயன்முறை என்னும் நாடக இலக்கண நூலை யாப்பருங்கல விருத்தி உரைகாரர் தம் உரையில் அறிய தருகிறார். நூல் என்னும் பெயருள்ள ஒரு நாடக இலக்கண நூல் இருந்தது என்பதை இறையனார் அகப்பொருள் உரையாசிரியரும் அடியார்க்குநல்லாரும் குறிப்பிடுகின்றனர். மதிவாணர் என்பவரால் எழுதப்பட்ட நாடகத் தமிழ்நூல் என்றொரு நாடக இலக்கண நூலை அடியார்க்கு நல்லார், தம் சிலப்பதிகார உரையில் எடுத்தாள்கிறார்.

1. தமிழில் இருந்த நாடக நூல்கள் யாவை?

2. இப்பத்தி குறிப்பிடும் உரையாசிரியர்கள் யாவர்?

3. இப்பத்தி குறிப்பிடும் இலக்கியம் மற்றும் இலக்கண நூல் உரைகள் யாவை?

4. தமிழில் முழுமையான நாடக இலக்கண நூல்கள் உள்ளனவா?

5. இப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பைச் சூட்டி அதன் சாரத்தை எழுதுக.